<u>தேதி - 25.04.2024</u>

<u>அசல் வழக்கு எண்.173/2004</u>

<u>வா.சா.2 - திருமதி. அம்சத்ராணி</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>

<u>2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

என்னுடைய பிறந்த தேதி 04.05.1970 ஆகும். 2 முதல் 4 வாதிகளான அனார்க்கலி, செய்யது ராபியத், லைலத்துல் பஜாரியா ஆகியோர்கள் என்னுடைய உடன்பிறந்த மூத்த சகோதரிகள் என்று சொன்னால் சரிதான். என்னை விட எனது மேற்சொன்ன 2 முதல் 4 வாதிகளான அனார்க்கலி, செய்யது ராபியத், லைலத்துல் பஜாரியா ஆகிய என்னுடைய உடன்பிறந்த மூத்த சகோதரிகளுக்கு இந்த வழக்கின் சொத்து சம்பந்தப்பட்ட விபரங்கள் நன்கு தெரியும் என்றால் எனக்கும் தெரியும். இந்த வழக்கில் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் உள்ள உறவுமுறையை காண்பிக்கக் கூடிய கொடிவழிஜாபிதா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம், எதனடிப்படையில் நாங்கள் பாகப்பாத்தியம் கோருகிறோம் என்று எங்களது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், 1963 ல் எங்களது பாட்டனார் அவர்களது பிள்ளைகளுக்கு அவரது சொத்துக்களை பிரித்துக் கொடுத்தார், 1970 ல் அவரது வாரிசுதாரர்கள் மேற்சொன்ன சொத்துக்களை பிரித்து எடுத்துக் கொண்டார்கள்.

1963 ல் எங்களது பாட்டனார் அவர்களது பிள்ளைகளுக்கு அவரது சொத்துக்களை பிரித்துக் கொடுத்தார் என்றும், 1970 ல் அவரது வாரிசுதாரர்கள் மேற்சொன்ன சொத்துக்களை பிரித்து எடுத்துக் கொண்டார்கள் என்றும் காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவாச் சொத்துக்களில் எங்களது பாகபாத்திய உரிமையை காட்டக் கூடிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், நாங்கள் 2000, 2017 ஆகிய வருடங்களில் நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்தோம், போலிசில் புகார் கொடுத்துள்ளோம். ஆனால் அதற்கான பத்திரங்கள், பட்டா போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தகப்பனார் சுல்தான் அலாவுதீன் என்பவரின் இறப்புச்சான்று, வாரிசு சான்று ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தாயார் தாவாச் சொத்துக்களை நிர்வாகம் செய்து, வாடகை வசூல் செய்து வரி செலுத்தி அனுபவித்து வந்தார் என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாவாச் சொத்துக்களுக்கு வரி எதுவும் செலுத்தப்படவில்லை, ஆனால் வாடகை வசூல் செய்ததற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை.

தாவாச் சொத்துக்களில் எங்களுக்கு கூட்டு பாத்தியம் உள்ளது என்றும், கூட்டு அனுபவத்தில் நாங்கள் உள்ளதாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் பத்தாம்வகுப்பு வரை படித்துள்ளேன், எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும்.

எனக்கு 1988 ம் வருடம் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின் நான் என்னுடைய கணவருடன் தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

நூர்முகமது என்பவர் யார் என்றால் எனது தாத்தாவின் அப்பா பெயர் ஆகும். நூர்முகமது என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று பெண்பிள்ளைகள், ஒரு ஆண்பிள்ளை ஆகும், எனது தாத்தா சையது

இப்ராஹிம் தான் அவருக்கு ஒரே ஆண்பிள்ளை ஆவார். சையதுஇப்ராகிமின் வாரிசுகள் மூன்று ஆண்பிள்ளைகள், ஒரு பெண்பிள்ளை ஆகும். அவர்களது பெயர்கள் நூர்முகமது, வீ.சுல்தான் அலாவுதீன் (எனது தகப்பனார்), சிந்தாமதார், அக்காணியம்மாள் ஆகும்.

இந்த அசல் வழக்கு எந்த வருடத்தில் தாக்கல் செய்தோம் என்றால் 2000 ம் வருடம் தாக்கல் செய்தோம்.

தாவா 2 வது அயிட்டச் சொத்தின் சர்வே எண்.1214 ஆகும். நாங்கள் தாவா 2 வது அயிட்டச் சொத்திற்கு வழக்குரையில் கூறியுள்ள சர்வே எண் தவறு என்று சொன்னால் அது சரியல்ல.

தாவாச் சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது, சாட்சி மீண்டும் தன்னுடைய தகப்பனார் சுல்தான் அலாவுதீன் பெயரில் இருக்கும் என்று கூறுகிறார்.

தாவாச் சொத்துக்களுக்கான சொத்துவரி இரசீது யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரிலும் இல்லை, யாரும் வரி கட்டவில்லை, எனது சித்தப்பாவான சிந்தாமதார் என்பவர் தான் கட்டி வந்தார்.

எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது யார் யாருக்கு திருமணம் நடந்தது என்று சொன்னால் எனது மூத்த அக்கா அனார்க்கலி என்பவருக்கு மட்டும் அவர் உயிருடன் இருந்த போது திருமணம் செய்து வைத்தார்.

எனது தகப்பனார் இறந்த பிறகு 1 ம் பிரதிவாதியான காஜா கமாலுதீன் என்பவர் தான் எங்களது குடும்பத்தையும், சகோதரிகளையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல, எனது தாயார் தான் எங்களை பராமரித்து வந்தார்.

1 ம் பிரதிவாதியான காஜா கமாலுதீன் என்பவர் தான் என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு சகோதரிகளுக்கு தனது செலவில் திருமணம் செலவு செய்து வைத்தார் என்றால் சரியல்ல.

எனது தகப்பனார் இறந்த பிறகு 1 ம் பிரதிவாதியான காஜா கமாலுதீன்

வருவாய் மட்டும் தான் இருந்தது, மற்ற வருவாய் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தாயார் வாடகை பணம் வாங்கி எங்களை கஷ்டப்பட்டு பராமரித்து வந்தார்.

1975 க்கு பிறகு நான், எனது சகோதரிகள், என்னுடைய அண்ணன், எனது தாயார் ஆகியோர்கள் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான், ஆனால் எனது மூன்று சகோதரிகளுக்கும் திருமணம் முடிந்த பின்னர் நானும், எனது தாயாரும் சேர்ந்து இருந்தோம், 1 ம் பிரதிவாதியான காஜா கமாலுதீன் மாடியில் தனியாக இருந்தார்.

தாவா 2 வது இலக்கச் சொத்தானது ஒரு வீடும், ஓட்டு தாழ்வாரச் செட்டும் ஆகும் என்றால் சரியல்ல.

தாவா 3 வது இலக்கச் சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கூடிய இடம் என்றால் அது 16-1/2 செண்டு ஆகும்.

தாவா 1 வது இலக்கச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 370 சதுரடி அளவுள்ள இடம் ஆகும். அதில் தரைதளம், முதல்தளம் உள்ளது.

தாவா 2 வது லக்கச் சொத்தின் சதுரடி 3100 ஆகும்.

தாவா 2 வது இலக்கச் சொத்து நாகூர் தோப்பிலும், தாவா 3 வது இலக்கச் சொத்து ஆற்றுப்படுகையிலும் அமைந்துள்ளது.

தாஜ்தீன் என்பவர் எனது மூத்தசகோதரி அனார்க்கலியின் கணவர் என்றால் சரிதான். என்னுடைய மற்ற சகோதரிகளுக்கும், எனக்கும் நல்ல உறவுமுறை உள்ளது என்றால் 8 வது பிரதிவாதியான ஷகீலா என்பவருக்கும், எங்களுக்கும் நல்ல உறவுமுறை இல்லாததால் அவரை பிரதிவாதியாக இந்த வழக்கில் சேர்த்துவிட்டோம்.

நானும், மற்ற சகோதரிகளும் இன்றைய தேதி வரை வீட்டு விசேசத்திற்கு சென்று வருகிறோம் என்றால் சரிதான், சாட்சி மீண்டும் மாறி 8 ம் பிரதிவாதியான ஷகிலா என்பவரை இவ்வழக்கில் இருந்து நீக்கிய பின்பு

அவருடைய வீட்டு விசேசத்திற்கு நாங்கள் போவதில்லை.

என் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள், என்னுடைய தாயார் ஆகியோருடைய கையொப்பங்களை பார்த்தால் என்னால் சொல்ல முடியும் என்றால் இல்லை.

வழக்கறிஞரை சந்தித்து வழக்குரையில் கையொப்பமிட நாங்கள் அனைத்து சகோதரிகளும் சேர்ந்து தான் சென்றோம் என்றால் சாட்சி இல்லை என்று கூறிவிட்டு, மீண்டும் அவ்வாறு சென்றதாக ஒப்புக் கொள்கிறார்.அவ்வாறு வழக்குரையில் நான் கையொப்பம் செய்யும் போது மற்ற சகோதரிகளின் கையொப்பங்களை நான் பார்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, அதில் சொத்துக்கள் எவ்வாறு வில்லங்கம் ஆகியுள்ளன என்று கூறப்பட்டுள்ளது அதுகுறித்து நான் தாவாச் சொத்துக்களக்கு வில்லங்கசான்றிதழ் போட்டு பார்த்து அந்த பத்திரங்களை நகல் எடுத்துப் பார்த்தேனா என்றால் வில்லங்கமே இல்லை, சாட்சி மீண்டும் மாற்றி பார்த்திருப்போம் என்று கூறுகிறார்.

போதிய நேரமின்மை காரணமாக 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி இத்துடன் நிறுத்தம் செய்யப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.